Regis ... Newspaper   பக்கங்கள் 04   விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM   Peoples Daily   மக்கள் தினசரி

நாதம்:- 03   திருவள்ளுவர் ஆண்டு 2023   வைகாசி 26   (08 - 06 - 1992)   திங்கட்கிழமை   ஓசை: 111

## 3,000 பாடசாலை அதிபர் வெற்றிடங்கள் நிரப்பப்படும்

இலங்கை பூராகவும் உள்ள பாடசாலைகளில் 3,000 அதிபர் பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிலவுவதாக கல்வி உயர்கல்வி அமைச்சு சேகரித்த தரவுகளிலிருந்து தெரியவருகின்றது. கடந்த செவ்வாய்க்கிழமை கல்வி அமைச்சில் நடந்த பத்திரிகையாளர் கூட்டத்தில் இத்தகவல் வெளியிடப்பட்டது. அதிபர் தரம் ஒன்றிற்கு 676 வெற்றிடங்களும், அதிபர்கள் தரம் 2, 3 க்கு 2400 வெற்றிடங்களும் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதிபர் தரம் ஒன்றிற்கு இரு முறைகளில் ஆள் சேர்க்கப் படும் என்று கல்விச்சேவைகள் சபையின் செயலாளர் எஸ். வீரரெட்ணா தெரிவித்தார். 60 விகிதமான அதிபர்கள் (4ஆம் பக்கம் பார்க்க)

# மணலாற்றில் பெரும் படையெடுப்பு

# ஆயிரக்கணக்கில் இராணுவம் குவிப்பு

## இம்மாத இறுதியில் தெரிவுக்குழு கூடலாம்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் அரசாங்கக் கட்சிக்கும், எதிரணிகட்சி சிலவற்றிற்கும் இடையே இருந்து வரும் இழுபறிக்கு அடுத்தவாரத்தில் தீர்வுகாணப்படலாம் என கொழும்புச் செய்திகள் நம்பிக்கை தெரிவிக்கின்றன.

தீர்வுகாணப்பட்டால் 20 ஆம் திகதிக்குப்பின்னர் இனப்பிரச்சினை தீர்விற்கான தெரிவுக் குழு கூடுமென்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

சபாநாயகர் எம். எச். மொஹமட்டிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது விவாதம் நடத்த அரசாங்கக் கட்சி இணங்கியிருப்பதை ஒரு சாதகமான நிலையாக கருதும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி இதன் மூலம் பாராளுமன்றத்தில் நிலவும் இழுபறி முறுகல் நிலை ஏற்படலாம் எனவும் எதிர்பார்க்கிறது.

## தமிழரிடம் பணம்பறித்த சிங்கள இளைஞர் கைது

(கொழும்பு)

தமிழர்களைக் கடத்திச் சென்று பயமுறுத்திப் பணம் பறிக்கும் சிங்கள இளைஞர் ஒருவரை பம்பலப்பிட்டிப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

இந்த வாரம் கைதுசெய்யப்பட்ட இவர்,ஆறு தமிழர்களைக்கடத்திப் பணம் பெற்றதாகப் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. இவருக்கு மற்றும் மூன்று பேர் உத (4ஆம் பக்கம் பார்க்க)

## எட்டு அரசியற் கட்சிகளை பிரேமா சந்திப்பார்

(கொழும்பு)

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக்குழுவை மீண்டும் ...

...க்கை விடுத்திருக்கும் எட்டு அரசியல் கட்சிகளின் தலைவர்களை சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா வரும் 15 ...

## வடக்கையும் கிழக்கையும் துண்டிக்க மீண்டும் முயற்சி

(யாழ்ப்பாணம்)

மணலாற்று பிரதேசத்தை ஊடுருவி வடக்கையும் - கிழக்கையும் பூகோள ரீதியாக துண்டித்துவிடும் தந்திரோபாயத்தின் அடிப்படையில் பெரும் படையெடுப்பிற்கான முஸ்தீபுகளில் சிறிலங்கா இராணுவம் ஈடுபட்டுள்ளது. இந்த நோக்கில் பல்லாயிரக்கணக்கான துருப்புகளும், இராணுவ தளபாடங்களும் இப் பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

மணலாற்றுப் பிரதேசத்தைக் கைப்பற்றுவதன்மூலம் வடக்கையும் கிழக்கையும் துண்டாடும் முயற்சியில் சிறிலங்கா இராணுவம் நீண்டகாலமாகவே முயற்சித்து வருகின்றமை தெரிந்ததே இதற்கு முன்னர்,இரு பெரும் படையெடுப்புக்களை சிறிலங்கா இராணுவம் இப்பிரதேசத்தின் மீதுநடத்தியபோதிலும்வெற்றி பெறமுடியவில்லை. இருதாக்குதலில் பாரிய இழப்புக்களுடன் இராணுவம் பின்வாங்கி (4ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கிலிருந்து வடக்கிற்கு பெருமளவு துருப்புகள் நகர்வு

### மட்டக்களப்பில் விசேட அதிரடிப்படை

(யாழ்ப்பாணம்)

கிழக்கிலிருந்து பெருமளவு இராணுவத்தினர் வடக்கிற்கு அனுப்பப்பட்டுள்ளதாகக் கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுவரை மட்டக்களப்பில் ...

...வத்தினருக்குப் பதிலாக அங்கு விசேட அதிரடிப்பொலிஸார் அனுப்பப்பட்டுள்ளதாகவும், அங்குள்ள முகாம்களிலிருந்த படையினர் தற்பொழுது வடக்கே அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

...களுவாஞ்சிக்குடிப் பகுதியை இராணுவத்தினரின் பொறுப்பில் இருந்து விசேட அதிரடிப் படையினர் பொறுப்பேற்றுள்ளனர் அத்தோடு, ஒந்தாச்சிமடத்தில் புதிய அதிரடிப்படை முகாம் ஒன்றும் அமைக்கப்பட் ...

## செஞ்சிலுவை அதிகாரிகள் தீவுப் பகுதிக்கு செல்வர்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் குழு மிக விரைவில் தீவுப்பகுதிகளுக்கு விஜயம் செய்ய உள்ளது. தீவுப்பகுதியின் இன்றைய நிலைமைகளை அறிந்துகொள்வதற்கும் கடும் நோய்களால் பாதிக்கப்பட்டிருப்பவர்களை சிகிச்சைக்காக அழைத்து வருவதற்காகவும் இவ் அதிகாரிகள் குழுவினர் செல்ல இருப்பதாக தெரிய வருகிறது.

## இவ்வருடத்தில் 346 படைபலி ராணுவவட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் இடம் பெறும் யுத்தத்தில் இவ்வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் 346 சிறிலங்கா படையினர் கொல்லப்பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கஜபார இராணுவநடவடிக்கையின் போது 91 படையினரும் வன்னிவிக்கிரம நடவடிக்கையில் 15இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர்.

யாழ். குடாநாட்டில் நடாத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகளில் 68 சிறிலங்கா படையினர் கொல்லப்பட்டனர். என மேலும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## கிளிவெட்டி மக்களுக்கு அடிப்படைவசதிகள் இல்லை

[திருக்கோணமலை]

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மூதூர் தொகுதியில் அமைந்துள்ள கிளிவெட்டிக்கிராமமக்கள் அடிப்படை வசதிகள் இன்றி நீண்ட காலமாக அவலநிலையில் வாழ்கின்றனர் ...

... பேசிக்கோபுரம் சனசமூக நிலையம் ஆகியவற்றின் கட்டடங்கள் இராணுவ நடவடிக்கைகளின் காரணமாக முற்றாக சேதமாக்கப்பட்டிருக்கிறது. பிரதான வீதிகள் பாலங்கள் போன்றவையும் சேதமடைந்திருக்கின்றன. ...

வுக் குழு கூடுமென்று அரசி எனவும் எதிர்பார்க்கிறது.

# தமிழரிடம் பணம்பறித்த சிங்கள இளைஞர் கைது

(கொழும்பு)

தமிழர்களைக் கடத்திச் சென்று பயமுறுத்திப் பணம் பறிக்கும் சிங்கள இளைஞர் ஒருவரை பம்பலப்பிட்டிப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

இந்த வாரம் கைதுசெய்யப் பட்ட இவர், ஆறு தமிழர்களைக் கடத்திப் பணம் பெற்றதாகப் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. இவருக்கு மற்றும் மூன்று பேர் உத

(4ஆம் பக்கம் பார்க்க)

# எட்டு அரசியற் கட்சிகளை பிரேமா சந்திப்பார்

(கொழும்பு)

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக் குழுவை மீண்டும் செயற்படுத்துவற்கு கோரிக்கை விடுத்திருக்கும் எட்டு அரசியல் கட்சிகளின் தலைவர்களை சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா வரும் 15 ஆம் திகதி சந்திக்கவுள்ளார்.

## பிரேமாவுக்கு எதிராக தென்பகுதியில்

# அன்னையர் முன்னணி பிரார்த்தனை நிகழ்ச்சி

(கொழும்பு)

இராணுவ நடவடிக்கைகாரணமாக இறந்துபோன சுமார் அறுபதினாயிரம் இளைஞர்களின் தாய்மார் ஒன்றிணைந்து ஜனாதிபதிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் பிரார்த்தனை நிகழ்ச்சி ஒன்றை ஏற்பாடு செய்துள்ளனர்.

ஜனாதிபதி பிரேமதாசாவின் பிறந்த தினமான இம்மாதம் 23 ஆம் திகதியே மேற்படி பிரார்த்தனை நிகழ்ச்சியை அன்னையர் முன்னணி ஏற்பாடு செய்துள்ளது. முகத்துவாரம் காளி கோயிலில் நடைபெறவிருக்கும் இப்பிரார்த்தனையின் நோக்கம் பற்றி சிறிலங்கா சுதந்திரக்கட்சி மாத்தறைபாராளுமன்றஉறுப்பினர் திரு. மங்கள சமரவீர கருத்துத் தெரிவிக்கையில் பிரேமதாசாவின் ஆட்சிக்கால

(4ஆம் பக்கம் பார்க்க)

# கடும்மழையினால் கொழும்பில் 15பேர் பலி

(கொழும்பு)

கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் காரணமாக வீடுகள் இடிந்து விழுந்ததினால் பதினைந்து பேர்வரை உயிர் இழந்துள்ளனர்.

வெள்ளத்தினால் ஏற்பட்ட பாதிப்புக்கள் தணிந்து வருகின்றன என்றும் பாதைகளில் வெள்ளம் வழிந்திருப்பதோடு மலையக ரயில் சேவையைத் தவிர ஏனைய ரயில் சேவைகள் வழமைபோல் நடைபெறுகின்றன என்றும் தெரிவிக்கப் படுகிறது.

வரும் செய்திகள் கூறுகின்றன.

மணலாற்றுப் பிரதேசத்தைக் கைபற்றுவதன்மூலம் வடக்கையும் கிழக்கையும் துண்டாடும் முயற்சியில் சிறிலங்கா இராணுவம் நீண்டகாலமாகவே முயற்சித்து வருகின்றமை தெரிந்ததே இதற்கு முன்னர், இரு பெரும் படையெடுப்புக்களை சிறிலங்கா இராணுவம் இப்பிரதேசத்தின் மீதுநடத்தியபோதிலும்வெற்றி பெறமுடியவில்லை. இருதாக்குதலில் பாரிய இழப்புக்களுடன் இராணுவம் பின்வாங்க

(4ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கிலிருந்து வடக்கிற்கு பெருமளவு துருப்புகள் நகர்வு

## மட்டக்களப்பில் விசேட அதிரடிப்படை

(யாழ்ப்பாணம்)

கிழக்கிலிருந்து பெருமளவு இராணுவத்தினர் வடக்கிற்கு அனுப்பப் பட்டுள்ளதாகக் கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுவரை மட்டக்களப்பில் கடமையில் இருந்த இராணுவத்தினருக்குப் பதிலாக அங்கு விசேட அதிரடிப்பொலிஸார் அனுப்பப்பட்டுள்ளதாகவும், அங்குள்ள முகாம்களிலிருந்த படையினர் தற்பொழுது வடக்கே அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் ஒரு கட்டமாகக் களுவாஞ்சிக்குடிப் பகுதியை இராணுவத்தினரின் பொறுப்பில் இருந்து விசேட அதிரடிப் படையினர் பொறுப்பேற்றுள்ளனர். அத்தோடு, ஒந்தாச்சிமடத்தில் புதிய அதிரடிப்படை முகாம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

# முல்லையில் புலிகள்-ராணுவம் மீண்டும் உக்கிர மோதல்

(கொழும்பு)

அளம்பிலிருந்து தென்பகுதி நோக்கி குமுளமுனையைக் கைப்பற்றும் நோக்கத்துடன் சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று தாக்குதலைத் தொடங்கியுள்ளதாக சிறிலங்காப் பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

முப்படைகளும் இணைந்து இப்பகுதியில் புதிய தாக்குதல்களை ஆரம்பித்து இருப்பதாகவும் கடும் சண்டை நடைபெற்று வருவதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இது குறித்து தகவல் வெளியிட்ட இராணுவப் பேச்சாளர் கேணல் முனசிங்க இரண்டு நாட்கள் படை அணியினரை ஒழுங்கமைத்ததிலும் நிலைகளைப் பலப் படுத்தியதிலும் ஈடுபட்ட இராணுவத்தினர்

(4ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை அகதிகள் விவகாரம் நரசிம்மாவிற்கு ஐ. நா. கடிதம்

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் (யூ என் எச்.சி.ஆர்) இந்தியப் பிரதமர் நரசிம்மராவிற்கு இலங்கை அகதிகளைத் திருப்பி அனுப்புவது தொடர்பாக நீண்ட கடிதம் ஒன்றை அனுப்பிவைத்திருப்பதாகத் தெரியவருகின்றது.

இக்கடிதத்தில் இலங்கை அகதிகள் வலுக்கட்டாயத்தின் பேரிலேயே அனுப்ப படுகின்றார்கள் என்றும், அதற்குபோதிய ஆதாரங்கள் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது மேலும், அகதிகளைத்திருப்பியனுபபும் விடயத்தை புனராலோசனை செய்யுமாறும் இந்தியப் பிரதமரைக் கோரப்பட்டுள்ளது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

### லெப். தமிழன்

07-06-1992 அன்று காலை 7-மணியளவில் கட்டுவன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான திடீர் மோதலில் விடுதலைப்புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவு அடைந்தார். இராணுவ தரப்பில் சேதவிபரம் தெரியவில்லை.

வீரச்சாவு அடைந்த லெப்டினன் தமிழன் (பீட்டர்-கேதீஸ்வரன் மகேஸ்வரன் துணைவி வட்டுக்கோட்டை (அளவெட்டி) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள்தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் இடம் பெறும் யுத்தத்தில்இவ்வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் 346 சிறிலங்கா படையினர் கொல்லப்பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சஜபார இராணுவநடவடிக்கையின் போது 91 படையினரும் வன்னிவிக்கிரம நடவடிக்கையில் 15இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர்.

யாழ் குடாநாட்டில் நடாத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகளில் 68 சிறிலங்கா படையினர் கொல்லப்பட்டனர். என மேலும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

# கிளிவெட்டி மக்களுக்கு அடிப்படைவசதிகள் இல்லை

[திருக்கோணமலை]

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மூதூர் தொகுதியில் அமைந்துள்ள கிளிவெட்டிக்கிராமமக்கள் அடிப்படை வசதிகள் இன்றி நீண்ட காலமாக அவலநிலையில் வாழ்கின்றனர்.

இக்கிராமத்தில் ஆரம்பத்தில் இருந்த கிளிவெட்டி மகா வித்தியாலயம், முத்துமாரி அம்மன் ஆலயம், ஆரம்பநீதி மன்றம், சமநலசேவை நிலையம், கிராமசபை கிராமிய வங்கி, நூல் நிலையம், தொலைபேசிக்கோபுரம் சன சமூக நிலயம் ஆகியவற்றின் கட்டடங்கள் இராணுவ நடவடிக்கைகளின் காரணமாக முற்றாக சேதமாக்கப்பட்டிருக்கிறது. பிரதான வீதிகள் பாலங்கள் போன்றவையும் சேதமடைந்திருக்கின்றன. இதனால் இக்கிராமத்து மக்கள் நீண்ட காலமாக பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இவர்களின் மேற்படி சிரமங்களை நீக்குவதற்கு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

# அகதிகள் வருகையை தடுக்க ஜேர்மனியில் புதிய சட்டம்

(பொன்)

அகதிகள் படையெடுப்பைத் தடுக்க ஜேர்மனியில் புதிய சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

ஜேர்மனியின் தஞ்ச சட்டங்களை குறிப்பிடத்தக்க அளவிற்கு மேலும் கடுமையான தாக்கவும், அங்கு தங்கியிருப்பதற்கு குடியேற்றவாசிகள் சமர்ப்பிக்கும் விண்ணப்பங்களை விரைவில் பரிசீலனை செய்வதற்கும் ஏதுவாக அவர்களைத் தங்க வைக்க பெரிய முகாம் ஒன்றை அமைக்கவும் வகை செய்யவே சட்டம் ஒன்று பாராளுமன்றத்தில் கடந்த வெள்ளியன்று நிறைவேற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

# வீடுபார்க்கச் சென்றவர் மீது இராணுவம் துப்பாக்கிச் சூடு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளைப் பகுதியில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று காலை 7 மணியளவில் அப்பகுதிக் குடிமனைகளை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் இதில் ஒருவர் காயமடைந்

(4ஆம் பக்கம் பார்க்க)

# பெண்களை துன்புறுத்தினால் கடுமையான நடவடிக்கை

## காவல்துறை பொறுப்பாளர் நடேசன் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழீழ காவல் துறையினருக்கு கடந்தகாலாண்டுகாலத்தில் கிடைக்கப் பெற்றுள்ள புகார்களின் அடிப்படையில், பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல்கள் குறிப்பிடப்படும் அளவில் உள்ளன.

உடலியல் ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் இவர்களின் எதிர்காலம் பாதிக்கக்கூடிய முறையில் இத் துன்புறுத்தல்கள்அமைந்துள்ளன. இவற்றை நாம் சாதாரண விடயமாக கருதமுடியாது பாரிய குற்றச் செயலாகவே கருதவேண்டும். இன்று சமுதாயப்பணியில் பெண்களின் பங்கு ஆண்களுடன் சரிக்குச் சரி சம பங்கை வகிக்கின்றது. குறிப்பாக விடுதலைப்போராட்டத்தில்பெண்கள் முக்கிய இடம் வகிப்பதை நாம் அறிவோம். இந்நிலையில் பெண்கள் எந்த வகையிலும் பாதிப்படைவதை நாம் அனு

(4ஆம் பக்கம் பார்க்க)

# சிறிலங்கா அரசுக்கு எதிராக 20 ஆயிரம் குற்றச்சாட்டுகள்

[கொழும்பு]

ஆட்சியில் அமர்ந்திருக்கும் அரசுக்கெதிரான சுமார் இருபதினாயிரம் குற்றச்சாட்டுக்கள் அடங்கிய குற்றப்பத்திரிகை தயாராகிக் கொண்டிருக்கிறது.

மிகவிரைவில் இக் குற்றப் பத்திரிகை பகிரங்கப்படுத்தப் பட இருக்கிறது. நாட்டின் அரசியல் யாப்புக்கு முரணாக சட்டவிரோத ஆயுதக்கும்பல்களை உருவாக்கியமை, பல்வேறு மனித உரிமை மீறல் சம்பவங்கள், அதிகார துஸ்பிரயோகம், தேர்தல் ஊழல்கள், மோசடிகள், உட்பட அரசு இதுவரை இழைத்து வந்த குற்றச் செயல்கள் அனைத்தும் இக் குற்றப்பத்திரிகையில் உள்ளடக்கப்பட

(4ஆம் பக்கம் பார்க்க)

**காடுகள் ! இயற்கையான பாதுகாப்பரண்கள்**

## கம்பன் கோட்டத்தில் இயங்கவில்லை

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் இயங்கி வந்த மகளிர் இல்லம் சிறிலங்கா விமானப்படையினரது குண்டுத் தாக்குதல் காரணமாக இடம் மாற்றப்பட்டுள்ளது.

மேற்படி இல்லத்தில் தங்கியிருந்த சுமார் 80 இற்கும்மேற்பட்ட யுவதிகள் சில தினங்கள் கைதடி சிறுவர் இல்லத்திலும் பின்னர் இராமநாதன் கல்லூரியிலும் தங்க வைக்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

மேற்படி இல்லம் நல்லூர் கம்பன் கோட்டத்தில் இயங்குகிறது என்று எமது பத்திரிகையில் வெளியாகிய செய்தி தவறானதாகும்.


அழகுமிகு அச்சுவேலைகள் துரித கதியில் செய்து கொள்ள

**நியூ ஈரா பப்ளிகேஷன்**

267, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.


## வீர அஞ்சலி



| தாயின் மடியில்: | தாயக விடிவில் |
|---|---|
| 06 | 03 |
| — | — |
| 09 | 06 |
| — | — |
| 1969 | 1992 |

**வீரவேங்கை லெப். ஈழவன்**

**ஐயாத்துரை சண்முகேஸ்வரன்**

**( கண்ணன் )**

வீரத்தின் விளைநிலத்தில்
விடியலின் பூபாளமிசைக்க
புறப்பட்ட வீரப்புலியே!
பிறேம்
மாணவர்களாக நாங்கள்
மகிழ்வுடன் திரிந்த
நினைவுகள் அலைமோத
'சண்' என நாங்கள்

சாந்தமுடன் வந்திடும்
சண்முகேஸ்வரனே!
ஈழக் கனவுகளை
இதயத்திலே தாங்கி
இனிய தமிழ் காக்கச்சென்ற
ஈழவனே!
நீ வீழ்ந்த இடத்தில்
விடியல் பூக்கும்

# அகதிகள் வருகையை கட்டுப்படுத்த கனடாவின் சட்டங்களில் மாற்றம்

[ஒட்டாவா]

உலகின் சகல பகுதிகளிலும் இருந்து வரும் குடியேற்ற வாசிகளுக்கு பாதுகாப்பு புகலிடமாக நீண்டகாலமாக விளங்கிவரும் கனடாவும் அகதிகளை கட்டுப்படுத்துவதற்கும் சில வகை குடியேற்ற வாசிகள் நாட்டுக்குள் பிரவேசிப்பதை கடுமையாக்கவும் அதன் சட்டங்களில் பாரிய மாற்றங்களைச் செய்யத் திட்டமிடுகிறது

புதிய சட்டமூலம் அகதிகளை அனுமதிக்கும் நடைமுறையை ஒழுங்கமைப்பதுடன் 1970 களில் வரையப்பட்ட சட்டங்களிலுள்ள பலவீனங்களை அகற்றும் என்றும் அரசாங்க அதிகாரிகள் கூறுகின்றனர்.

ஆனால் புதிய சட்டமூலம் அகதிகள் தொடர்ந்தும் கனடாவில் தங்கியிருப்பதை நெருக்கடிக்குள்ளாக்கும். அத்துடன் வலதுசாரிகளின் ஆதரவு குறைந்து வருவதால் கவலைப்படும் கன்சர்வேட்டிவ் அரசாங்கம் அகதிகளுக்கு எதிராக மேற்கொள்ள உத்தேசிக்கும் நடவடிக்கைகளின் ஒருபகுதியாகவே இதை கருத முடிகிறது என்று குடியேற்ற வாசிகளுக்காக பரிந்துரைக்கும் வழக்கறிஞர்கள் கூறுகிறார்கள்.

அகதிகள் வருகை விவகாரத்தில் மேலும் கூடுதலான கட்டுப்பாடுகள் விதிக்கப்படப் போகிறது என்பது நிச்சயம் என்று அகதிகளுக்குச் சட்ட உதவிகள் வழங்கும் ஒன்டாரியோ சட்ட யூனியன் என்ற அமைப்பைச் சேர்ந்த வழக்கறிஞரான நான்ஸி குட்மான் கூறினார்.

புதிய சட்டமூலம் இந்த மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென குடிவரவு அமைச்சரான பேர்னாட் வால்கோர்ட் கூறினார்.

குடியேற்ற வாசிகளை எவ்வாறு ஒழுங்காக தெரிவு செய்வது; அகதிகள் பெருமளவில் படையெடுப்பதை எவ்வாறு தடுப்பது என்ற விவகாரங்களை சட்டமூலம் கையாளும் என்று குடிவரவு திணைக்களத்தின் கொள்கை முகாமையாளரான ஜெரிமா பியர் தெரிவித்தார்.

சட்டவிரோத குடியேற்ற வாசிகளை நாடு கடத்தும் நடவடிக்கைகளை புதிய சட்டமூலம் எளிதாக்குவது சாத்தியம் அத்துடன் முதலீட்டாளர்களுக்கான விசேட ஏற்பாடுகளின் கீழ் நாட்டுக்குள் அனுமதிக்கப்பட்ட குடியேற்ற வாசிகள் முதலீட்டு உறுதிமொழியை காப்பாற்றுவதையும் இச்சட்டம் உறுதிசெய்யும்.

இவ் வருடம் இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் குடியேற்ற வாசிகளை அனுமதிக்கும் இலக்கை கனடா கொண்டுள்ளது. இவ் வருடத்தின் முதல் காலாண்டு பகுதியில் கனடாவில் ஏற்புரிமை வழங்கப்பட்ட அகதிகளின் எண்ணிக்கைவீழ்ச்சி கண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஒந்தாச்சிமடக் கிராமத்தில் விசேட அதிரடிப்படைமுகாம்

(அம்பாறை)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டு நகருக்கும் கல்முனைக்கும் இடையில் உள்ள ஒந்தாச்சி மடம் கிராமத்தில் விசேட அதிரடிப்படையினர் இப்போது நிலை கொண்டுள்ளனர்.

அங்கு முகாம் ஒன்று அமைக்கும் வேலையில் அதிரடிப்படையினர் தற்பொழுது ஈடுபட்டுவருகின்றனர் அதே இடத்தில் முன்னர் இந்திய அமைதிப்படையினர் இங்கு முகாமிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### தமிழர்-சிங்களவரிடையே

## புரிந்துணர்வு ஏற்படாவிடில் நாடு சீரழிய நேரிடும்

**- பெஸ்டஸ் பெரேரா**

(வவுனியா)

தமிழர் சிங்களவர் ஆகிய இரு இனங்களிற்கிடையேயும் அமைதியும் சமாதானமும் புரிந்துணர்வும் ஏற்படாவிட்டால் நாடுசீரழிய நேரிடும்.

இவ்வாறு பொது நிர்வாக மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா கூறினார்.

அமைச்சர் கடந்த சனிக்கிழமை வவுனியா காமினி மகா வித்தியாலயத்தில் அரசு மொழித்திணைக்கள மொழிப்பயிற்சி திட்டத்தின் 19 ஆவது மாவட்ட பயிற்சித்திட்ட நிகழ்ச்சியை தொடக்கி வைத்துப் பேசினார் அவர் மேலும் கூறியதாவது;

கடந்த காலங்களில் இனங்களிற் இடையே அமைதியின்மை ஏற்படவும் இரத்த ஆறு ஓடவும் வன்செயல்கள் தலைவிரித்து ஆடவும் கடந்த 1956-ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட மொழிக் கொள்கையே காரணமாகும். 1956-ம் ஆண்டிற்கு முன்னர் இந் நாட்டின் இனங்களிற்கு இடையே இருந்தபுரிந்துணர்வு ன்கூடிய சுமுகமான அமைதி சூழ்நிலையை மீண்டும் ஏற்படுத்துவதற்கு எமது ஜனாதிபதி பாடுபட்டுவருகின்றார்.

## மகனின் விடுதலை கோரி தாய் ஆட்கொணர்வு மனு

(கொழும்பு)

மகசீன் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மட்டுநகர் உடபோடை சித்தி விநாயகர் கோவிலைச்சேர்ந்த கனகசபாபதிக் குருக்கள் ராமகிருஷ்ணனை விடுதலை செய்யக் கோரி அவரின் தாயார் ருக்மணி ஆட்கொணர்வுமனு தாக்கல்செய்துள்ளார்.

இந்த மனுவில் கடந்த வருடம் மார்ச் மாதம் 27 ஆம் திகதி சாரதியான ராமகிருஷ்ணனை மட்டுநகர் பொலிசார் அரசடிச் சந்தியில் வைத்து கைது செய்தனர் என்றும்பின்னர் அதேயாண்டு ஒக்ஸ்ட் மாதம் கொழும்பு புதிய மகசீன் சிறைக்கு கொண்டு வரப்பட்ட இவர் நவம்பர் மாதம் 11 ஆம் திகதி களுத்துறை சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

வேண்டும் என்றும் அந்தமனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது

இந்த மனுவில் மட்டுநகர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பொலிஸ் மா அதிபர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் களுத்துறை புதிய மகசீன் சிறைச்சாலை அத்தியட்சகர் சட்டமா அதிபர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்த மனுவை செவ்வாயன்று விசாரணைக்கு ஏற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் விஜயரட்ண, ஆனந்த கிரேரோ ஆகியோர் பிரதிவாதிகள் பதில் தாக்கல் செய்ய இம்மாதம் 22-ம் திகதி வரை அவகாசம் வழங்கினர்.

அத்துடன் அவசரகால விதி...

### டென்சில் கொப்பேகடுவவுக்கு

## சேவைக்கால நீடிப்பும்; பதவி உயர்வும்

### மனையியல், விவசாயம், உடற்கல்வி

## உதவி ஆசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரல்

(கொழும்பு)

மனையியல், விவசாய விஞ்ஞான டிப்ளோமா தாரர்கள் மற்றும் உடற்கல்வி உதவியாசிரியர் பதவிகளுக்காக தகைமை பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்று அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைச் சபையின் செயலாளர் ஏ.எஸ். வீரரத்ன தெரிவித்துள்ளார்.

இதற்கான விண்ணப்பங்களை 26-06-1992 க்கு முன்னர் கல்விச் சேவைச் சபைக்கு அனுப்பி வைக்குமாறும்.

மேலதிக விபரங்களுக்கு 05-06-1992 அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையைப் பார்க்கும்படியும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மூளாய் இந்து இளைஞர் மன்ற விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

மூளாய இந்து இளைஞர் மன்றத்தின் வருடாந்த விளையாட்டுப்போட்டி எதிர்வரும் 27 ஆம் திகதி நடைபெற உள்ளது

இப்போட்டியில் இம்முறை விசேட நிகழ்ச்சியாக மாட்டு வண்டிச்சவாரி நடைபெற இருக்கிறது அத்துடன் ஏனைய வழைமையான போட்டி நிகழ்ச்சிகளும் இடம் பெற உள்ளது

இவ்விளையாட்டுப் போட்டிக்கான தயாரிப்பு வேலைகளில் மேற்படி மன்றத்தினர் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றனர். போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன மாட்டுவண்டில சவாரியில் பங்குபற்றுவது தொடர்பான விபரங்கள் விரைவில் வெளியிடப்பட உள்ளது

## மேலதிக பரிசோதனைக்கிளை

[யாழ்ப்பாணம்]

யாழ் போதனா வைத்திய சாலையில் கண் கிளினிக்கிற்கு வரும் நோயாளரின் அவல நிலையை போக்கும் முகமாக இன்று முதல் வெளிநோயாளர் மேலமாடியில மேலதிகமினி கண் பரிசோதனைக் கிளை ஒன்று திறக்கப்படுகின்றது.

### வாசக நேயர்களே!

எமது ஈழநாதம் வெள்ளி மஞ்சரிக்கு வாசகர்களிடம் இருந்து தரமான சிறுகதை ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம். பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு முந்நூறு ரூபாய் சன்மானம் வழங்கப்படும் என்பதையும் அறியத்தருகிறோம்.

- ஆசிரியர்

1969  1992

## வீரவேங்கை லெப். ஈழவன்

### ஐயாத்துரை சண்முகேஸ்வரன்

### ( கண்ணன் )

வீரத்தின் விளைநிலத்தில்
விடியலின் பூபாளமிசைக்க
புறப்பட்ட வீரப்புலியே!
பிறேம்
மாணவர்களாக நாங்கள்
மகிழ்வுடன் திரிந்த
நினைவுகள் அலைமோத
'சண்' என நாங்கள்
சந்தோசமாய் அழைத்திட

சாந்தமுடன் வந்திடும்
சண்முகேஸ்வரனே!
ஈழக் கனவுகளை
இதயத்திலே தாங்கி
இனிய தமிழ் காக்கச்சென்ற
ஈழவனே!
நீ வீழ்ந்த இடத்தில்
விடியல் பூக்கும்
சுதந்திர தமிழீழம் - நிச்சயம்
நாளை மலரும்

என்றும் உன் நினைவுகளுடன்
நண்பன்
ம. செல்வக்குமார்

தேவரையாளி,
கரவெட்டி வடக்கு.

(2645)

மட்டுநகர் உடபோடை சித்தி விநாயகர் கோவிலைச்சேர்ந்த கனகசபாபதிக் குருக்கள் ராமகிருஷ்ணனை விடுதலை செய்யக் கோரி அவரின் தாய் ராதா ருக்மணி ஆட்கொணர்வுமனு தாக்கல்செய்துள்ளார்.

இந்த மனுவில் கடந்த வருடம் மார்ச் மாதம் 27 ஆம் திகதி சாரதியான ராமகிருஷ்ணனை மட்டுநகர் பொலிசார் அரசடிச் சந்தியில் வைத்து கைது செய்தனர் என்றும்பின்னர் அதேயாண்டு ஒகஸ்ட் மாதம் கொழும்பு புதிய மகசீன் சிறைக்கு கொண்டுவரப்பட்ட இவர் நவம்பர் மாதம் 11 ஆம் திகதி களுத்துறை சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

அத்துடன் அவசரகால விதிகளின் 19 (2) பிரிவின்படி தொண்ணூறு நாள் முடிந்ததும் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவேண்டும் ஆனால் ஆஜர் செய்யப்படவில்லை எனவே கைதும் தடுத்து வைப்பும் சட்டவிரோதம், மன்றில் ஆஜர் செய்ய உத்தரவிடவேண்டும் ஏனைய செலவுத் தொகைகளையும் வழங்க

பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பொலிஸ் மா அதிபர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் களுத்துறை புதிய மகஸீன் சிறைச்சாலை அத்தியட்சர் சட்டமா அதிபர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்த மனுவை செவ்வாயன்று விசாரணைக்கு ஏற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் விஜயரட்ண, ஆனந்தி கிரேரோ ஆகியோர் பிரதிவாதிகள் பதில் தாக்கல் செய்ய இம்மாதம் 22-ம் திகதி வரை அவகாசம் வழங்கினர்.

யதாவது;

கடந்த காலங்களில் இனங்களிற் இடையே அமைதியின்மை ஏற்படவும் இரத்த ஆறு ஓடவும் வன் செயல்கள் தலை விரித்து ஆடவும் கடந்த 1956-ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட மொழிக் கொள்கையே காரணமாகும். 1956-ம் ஆண்டிற்கு முன்னர் இந் நாட்டின் இனங்களிற்கு இடையே இருந்தபுரிந்துணர்வு ன்கூடிய சமூகமான அமைதி சூழ்நிலையை மீண்டும் ஏற்படுத்துவதற்கு எமது ஜனாதிபதி பாடுபட்டுவருகின்றார்.

ரியர் பதவிகளுக்கான தகைமை பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்று அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைச் சபையின் செயலாளர் ஏ.எஸ். வீரரத்ன தெரி

அனுப்பி வைக்குமாறும்.

மேலதிக விபரங்களுக்கு 05-06-1992 அரசாங்க வர்த்தமானிப்பத்திரிகையைப்பார்க்கும்படியும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வாசக நேயர்களே!

எமது ஈழநாதம் வெள்ளி மஞ்சரிக்கு வாசகர்களிடம் இருந்து தரமான சிறுகதை ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம். பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு முந்நூறு ரூபாய் சன்மானம் வழங்கப்படும் என்பதையும் அறியத்தருகினறோம்.

- ஆசிரியர்


எந்த வகை **பத்திரிகைத் தாளிலும் மட்டை(BOARD)களிலும்**

மனம் நிறைந்த
தரம் குன்றாத

அச்சு வேலைகளுக்கு

தமிழ், ஆங்கிலம்
ஆகிய மொழிகளில்
துண்டுப் பிரசுரங்கள்
தொடக்கம்
பாரிய புத்தகங்கள்
வரை
பொறுப்பேற்கப்படும்

# ஈழநாதம்

( அச்சக வர்த்தகப் பகுதி )

மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்


### டென்சில் கொப்பேகடுவவுக்த

# சேவைக்கால நீடிப்பும்; பதவி உயர்வும்

## 5 அதிகாரிகளுக்கு சேவை நீடிப்பு

[கொழும்பு]

சிறிலங்கா வடபிராந்திய இராணுவப் பிரிவின் இரண்டாவது பிரிவுக்கமாண்டர் டென்சில் கொப்பேகடுவ 1993 ஆம் ஆண்டு ஜனவரி முதல் திகதியிலிருந்து சேவைக்காலம் நீடிக்கப்பட்டுள்ளதுஅத்துடன் அததிகதியிலிருந்து பிரதம அதிகாரியாகவு நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான உத்தரவுகளை சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஆர். பிரேமதாசா பிறப்பித்துள்ளார் மேலும் ஐந்து அதிகாரிகளுக்கு பதவி உயர்வும் பதவிக்கால நீடிப்பும் செய்யப்பட்டுள்ளது. அவர்களின் பெயர் விபரம்;

மேஜர் ஜெனரல்ஜே ஆர். டி. சில்வா பிரதம அதிகாரி இவரின் சேவைக்காலம் 1992 ஆம் ஆண்டு யூலை மாதம் 31ஆம திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. ஓய்வு பெறுவதற்கு முன்னர் இவருக்கு லீவு வழங்கப்பட்டுள்ளது.

தொண்டர் படைக்காமண்டர் மேஜர் ஜெனரல் பலரத்னராஜா இவரின் சேவைக்காலம் 1992 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. 1992ஆம் ஆண்டு யூன் மாதம் 10 ஆம் திகதியிலிருந்து 1992ஆம் ஆண்டு செப்டம்பர் 30ஆம் திகதிவரை பிரதம அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாண மூன்றாவது பிரிவுக் கமாண்டர் மேஜர் ஜெனரல் சி. எச். டி. சில்வா 1992 ஆம் ஆண்டு யூன் மாதம் 10ஆம திகதியிலிருநது தொண்டர் படைக் கமாண்டராக நியமிக்கப்பட்டுள்ளார். 1992 ஆம் ஆண்டு அக்டோபர் முதல் திகதியிலிருந்து 1992 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி வரை பிரதம அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

பனாகொடை முதலாவது பிரிவின் கமாண்டர் மேஜர் ஜெனரால் ரி. பரணகம கிழக்கு பிராந்திய மூன்றாவது பிரிவின் கமாண்டராக 1992 ஆம் ஆண்டு யூன் மாதம் 10ஆம் திகதியிலிருநது நியமிக்கபபட்டுள்ளார்.

இராணுவ செயலாளர் பிரிகேடியர் ஸி ஜே. அபயரத்னா 1992ஆம் ஆண்டு யூன் 10 ஆம் திகதியிலிருந்து பனாகொடை முதலாவது பிரிவின் கமாண்டராக நியமிக்கப்பட்டுள்ளார் 1992ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 1ஆம் திகதியிலிருந்து மேஜர் ஜெனரலாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

# மலையக பட்டதாரிகள் ஒன்றியம் அமைக்க ஏற்பாடு

(கண்டி)

இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளித் தமிழ் சமூகத்திலிருந்தும் உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் உள்ள பல்கலைக் கழகங்களில் உயர் கல்வி கற்ற பட்டதாரிகளை கொண்டு மலையகப் பட்டதாரிகள் ஒன்றியம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான முதலாவது கூட்டம் வரும் 12 ஆம் திகதி கண்டியில் நடைபெறும் என்றும், இவ்வொன்றியம் அமைப்பது தொடர்பாக ஏற்பாட்டாளர்களுடன்தொடர்பு கொண்டவர்கள் யாவருக்கும் பொதுக் கூட்டத்திற்கான அழைப்புக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

# நினைவு கூருகின்றோம்...

## 1992-06-08

1986 ஆம் ஆண்டு இதேதினத்தில் கிளிநொச்சி/முறிகண்டி முரசுமோட்டை, உருத்திரபுரம், கணேசபுரம், திருநகர்ப் பகுதிகளில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்டவிமானக்குண்டுவீச்சுத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட 25 தமிழர்கள்.

1987 ஆம் ஆண்டு கட்டுவனில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -
**2 ஆம் லெப். விஜி** (வில்லியம் - வவுனியா)

கீரிமலையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -
**குமரன்** (கிட்னர் ஆனந்தவடிவேல் - இராசவீதி, கோப்பாய்)

மட்டக்களப்பில், சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 7 தமிழர்கள்.

தையிட்டியில், சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டு எரிக்கப்பட்ட 11 தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு புத்தூரில், இந்தியப் படையினர் மேற்கொண்ட திடீர்த்தாககுதலில் வீரச்சாவெய்திய -
**தாமு** (கணபதி இரத்தினம் - புத்தூர் கிழக்கு)

1991 ஆம் ஆண்டு மட்டக்களப்பு- வந்தாறுமூலைப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் அம்பலத்தடிப் பகுதியைச் சுற்றிவளைத்து மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட களுவங்கேணி- 2ஐச் சேர்ந்த பெண் களுவங்கேணி- 1ஐச் சேர்ந்த கடற்றொழிலாளியான இளைஞன்.வந்தாறுமூலையைச் சேர்ந்த 3 இளைஞர்கள், வந்தாறுமூலை - பிரதான வீதியைச் சேர்ந்த விவசாயியான இளைஞர், இதே முகவரியைச் சேர்ந்த ஆசிரியர் ஆகிய 7 தமிழர்கள்;

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்**

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/4520)

## சிந்தனைக்கு

எறும்பு செய்யும் உபதேசமே சிறந்தது
அது எதுவுமே சொல்வதில்லை.
— பெஞ்சமின் ஃபிராங்க்ளின்


# ஈழநாதம்

51, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 08-06-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 63


# போருக்கெதிரானதல்ல அரசுக்கெதிரானது

"தென் பகுதியில் ஏற்படும் அரசியற் கொந்தளிப்பை திசை திருப்பவே அரசு வடக்கில் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்கின்றது'' என கொழும்பு புதிய நகர மண்டபத்தில் பத்திரிகையாளர்கள் அண்மையில் நடத்திய அரசிற்கெதிரான கூட்டத்தில் பதிரிவிக்கப்பட்டது.

சிறிலங்கா அரசாங்கம் மீது பத்திரிகையாளர் சுமத்துவன இக்குற்றச்சாட்டு தவறானதொன்றல்ல. ஆனால், இது புதுமையான தொன்றும் அல்ல. தென்னிலங்கையில் காலத்திற்குக் காலம் அரசியல் நெருக்கடிகள் தீவிரமாகும் போது இனவாதத்தை கிளறிவிட்டு அவற்றைத் திசை திருப்பி விடுவது சிங்கள பேரினவாத அரசாங்கங்களின் வழமையான நடவடிக்கைகளேயாகும். ஒன்று இனவன்முறைகளை திட்டமிட்டு கட்டவிழ்த்து விடுதல், அல்லது இராணுவ நடவடிக்கைகளைத் தீவிரமாக்குதல் என்பன சாதாரணவழி முறைகள் ஆகும்.

தற்பொழுது பல்வேறு காரணங்களினால் தென்னிலங்கையில் அரசியற் கொந்தளிப்பு நிலை உருவாகியுள்ளது. இதில் முக்கியமானது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சீர்கேடாகும். இன்று நாட்டின் வருமானத்தில் பெரும்பகுதி வடக்கு-கிழக்கில் இடம்பெற்று வரும் போருக்குச் செலவாகிறது. இதன் காரணமாக பெருமளவில் உற்பத்தி வீழ்ச்சியும், வேலையில்லாத் திண்டாட்டமும் அதிகரித்துள்ளது.

அரசாங்கம் கடைப்பிடித்து வரும் தனியார் மயமாக்கல் கொள்கை, வழமையான வேலையில்லாப் படையினருடன் மேலும், ஒரு தொகுதி வேலையில்லாப் படையினரைச் சேர்த்துள்ளது. அதாவது தனியார் மயமாக்கலின் மூலம், மேற்கொள்ளப்படும் வேலையாள் குறைப்பு நடவடிக்கைகளினால் பெருமளவு எண்ணிக்கையானோர் வேலையிழக்கும் நிலையும் உருவாகியுள்ளது. இதனால் நெருக்கடி தீவிரமாகியுள்ளது.

போருக்கென பெருமளவு நிதி ஒதுக்கப்படுவதினால் பொருளாதார அபிவிருத்திக்கென ஒதுக்கப்படும் தொகை மிகவும் குறைவாக இருப்பதினால் புதிய வேலைவாய்ப்பினை உருவாக்கவோ அல்லது உற்பத்திப் பெருக்கத்திற்கான வாய்ப்போ அற்றுப் போயுள்ளது. ஆயுதப்படையினால் மட்டுமே வேலைவாய்ப்பு கிடைப்பதற்கான வாய்ப்பு ஓரளவு உண்டு. அது நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு உகந்ததல்ல.

பொருளாதாரச் சீர்கேடு ... [illegible]

# இந்தியாவின் 'அக்னி'ப் பரீட்சை உலக நாடுகளை ஈர்ந்துள்ளது

இந்தியா தன்னுடைய சொந்த முயற்சியால் தயாரித்த நடுத்தர அளவு தூரம் பாயக் கூடிய 'அக்னி' ஏவுகணையின் இரண்டாம் கட்டப் பரிசோதனையை அண்மையில் மேற்கொண்டது. இது நீண்ட காலமாகவே திட்டமிட்டிருந்த ஒரு முயற்சியாக இருந்த போதிலும், இது பரிசோதனைக்குட்பட்ட நேரம் இதன்பால் உலகத்தின் கவனத்தை ஈர்ப்பதற்குக் காரணமாக இருந்துவிட்டது.

'அக்னி' வெற்றிகரமான முறையில் பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட போதிலும், அது குறிப்பிட்ட இலக்கை அடையத் தவறிவிட்டதென இந்திய விஞ்ஞானிகள் தெரிவித்திருக்கின்றனர். மேலும் இப்பரிசோதனைக்கு எதிராக கண்டனங்கள் எழுந்துள்ள அதே வேளையில் இதனை எந்த விதமான இராணுவ நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தும் எண்ணம் தமக்கு இல்லை என இந்தியா தெரிவித்திருக்கின்றது.

உலகிலுள்ள வல்லரசு நாடுகளைத் தவிர்ந்த இரண்டு நாடுகள் மட்டுமே இவ்வாறான நடுத்தர வீச்சு ஏவுகணைகளைக் கொண்டுள்ளன. அவை சீனாவும், இஸ்ரேலுமாகும். இப்போது இந்த வல்லரசு நாடுகளுக்குப் போட்டியாக தன்னுடைய சொந்தத் தொழில் நுட்ப அறிவை மட்டுமே பயன்படுத்தி இவ்வகையான ஏவுகணை ஒன்றை இந்தியா தயாரித்திருப்பது ஆயுத தொழில் நுட்ப அறிவைப் பொறுத்த வரையில் வல்லரசுகளின் வரிசையில் வரக்கூடிய ஒரு தகுதியை இந்தியாவுக்கு ஏற்படுத்திக் கொடுத்திருப்பதாக அவதானிகள் பலரும் கருத்துத் தெரிவித்திருக்கின்றனர்.

இது வல்லரசு நாடுகளுக்கு குறிப்பாக அமெரிக்காவிற்கு மகிழ்ச்சியைக் கொடுக்கக் கூடிய ஒரு விடயமாக இருக்காது என்பதை அது, இப்பரிசோதனை தொடர்பாக வெளியிட்ட அறிக்கை உறுதிப்படுத்தியுள்ளது. மூன்றாம் உலக நாடுகளுக்கு ஆயுத தொழில் நுட்பங்கள் பரவுவதை அமெரிக்கா எப்போதும் எதிர்த்தே வந்துள்ளது இந்த நிலையில் இந்தியாவின் இப்பரிசோதனை அமெரிக்காவிற்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியதில் வியப்பில்லைத்தான்.

அத்துடன் தொழில் நுட்பம் பரவுவது குறித்து-குறிப்பாக அணுகுண்டுகளைத் தயாரிக்கும் ஆற்றலைக் கொண்டிருப்பவை என நம்பப்படும் இந்தியாவும் பாகிஸ்தானும் அமைந்திருக்கும் தெற்காசியாவில் ஏவுகணை தொழில் நுட்பம் பரவுவது குறித்து அமெரிக்கா கவலை வெளியிட்டதுடன் 'அக்னி' பரீட்சிப்பையும் கண்டித்திருக்கிறது.

ஆனால் அமெரிக்காவின் இக்கண்டனத்தையும் கரிசனையையும் ஏற்க மறுத்துள்ள இந்தியா தன்னுடைய இப்பரிசோதனை ஆயுதப்போட்டி நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல என்று தெரிவித்துள்ளதுடன், 'அக்னி' ஒரு ஆயுத அமைப்பு அல்ல எனவும், அது ஒரு தொழில் நுட்ப விளக்கக் கருவியே எனவும் உத்தியோக பூர்வமாகத் தெரிவித்துள்ளது.

செய்மதிகள் போன்றவற்றை வானிற்கு அனுப்புவதற்காகவே இவை பயன்படுத்தப்படும் என்ற விதமாக இந்தியா தெரிவித்திருக்கும் சமாதானத்தை ஏற்றுக் கொள்ள அமெரிக்காவோ ஏனைய மேல் நாடுகளோ தயாராக இல்லை. இந்தியா சொல்வது உண்மையாக இருக்கலாம். ஆனால் ஒரு தேவை ஏற்படும் போது ஆயுதங்களை ஏவுவதற்காகவோ மற்றொரு நாட்டைத் தாக்குவதற்காகவோ இந்தியா இதனைப் பயன் படுத்தாது என்பது என்ன நிச்சயம்?'' என அவை சிந்திக்கின்றன.

ஆனால், இந்தியாவைப் பொறுத்த வரையில் இவ்வளவு சக்தி வாய்ந்த ஆயுதம் ஒன்றைச் செய்ய முடிந்ததையிட்டு அது பெருமைப்படுகின்றது. அயல் நாடுகள் எதனுடைய உதவியும் இல்லாமல் இவ்வாறான உயர்ந்த தொழில் நுட்பத் திறனைக் கொண்டுள்ள ஆயுதமொன்றை தன்னால் தனித்து செய்ய முடியும் என்பதை அது உலகத்திற்கு நிரூபித்துக் காட்டியுள்ளது

ரஷ்யாவிடம் இருந்து ஏவுகணைத் தொழில் நுட்பத்தை பெறுவது தொடர்பான ஒப்பந்தம் ஒன்றில் இந்தியா அண்மையில் கைச்சாத்திட்டது. இவ்வாறான ஒப்பந்தம் ஒன்றைச் செய்ய வேண்டாம் என இரு நாடுகளையும் கேட்டுக் கொண்ட அமெரிக்கா பின்னர் இரு நாடுகளுக்கும் எதிராக வரையறுக்கப்பட்ட தடைகளை விதித்தது.

இச் சம்பவம் இந்திய விஞ்ஞானிகள் மத்தியில் ஒரு தாக்கத்தையும் உந்துதலையும் ஏற்படுத்தியது அமெரிக்காவின் அச்சுறுத்தலுக்கு அஞ்சி சில சமயம் ரஷ்யா இத் தொழில் நுட்பத்தைத் தருவதை மறுத்து விட்டால் என்ன செய்வது என்று அவர்களைச் சிந்திக்கத் தூண்டியது.

ஆனால் ''அக்னி'' சோதனையின் மூலம் எவ்வாறான நிலைமையிலும் தம்மால் சமாளிக்க முடியும் என்பதை உலகிற்கு எடுத்துக்காட்டியுள்ளது. உலகின் கவனம் இந்த சோதனை முயற்சியின் பால் ஈர்க்கப்பட்டமைக்கான முக்கிய காரணங்களில் இதுவும் ஒன்று.

> ''அக்னி'' ஏவுகணையின் முதலாவது கட்ட பரிசோதனை 1989ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதி நடைபெற்றது. இரண்டாம் கட்டமாக இந்த வருடம் மே மாதம் 29ஆம் திகதி இந்தப் பரிசோதனையை இந்தியா செய்தது இந்தப்பரிசோதனையை அடுத்து நடுத்தர வீச்சு ஏவுகணையை ஏவக்கூடிய ஆற்றல் கொண்ட ஆறாவது நாடாக உலகில் இந்தியா திகழ்கின்றது.

தொழில் நுட்பத்துறையில் இந்தியாவின் முதலாவது சாதனை இது தான் என்று கூறிவிட முடியாது இதற்கு முன்னர் இந்தியா செய்த சில சாதனைகளும் உலகின் கவனத்தை ஈர்ப்பதாகவே இருந்துள்ளது

1988 ஆம் ஆண்டில் ''பிரிதிவ்'' என்ற ஏவுகணையை முதன் முதலாக இந்தியா பரிசோதனை செய்த போது உலக நாடுகள் அனைத்தும் இந்தியாவை வியப்புடன் நோக்கின உலகின் ஏழ்மை நாடுகளில் ஒன்றாகக் கருதப்பட்ட இந்தியாவின் தொழில் நுட்ப முன்னேற்றம் உலக நாடுகளுக்கு ஆச்சரியத்தை அளித்தது.

அதற்கு அடுத்த வருடம் 1989 மே 22 ஆம் திகதி 'அக்னி' ஏவுகணையின் முதலாவது கட்ட பரிசோதனையை இந்தியா மேற்கொண்ட போது இந்தியாவிற்கு எதிரான பல விமர்சனங்கள் உருவாவதைக் கேட்கக் கூடியதாக இருந்தது

ஆனால் இது ஒரு ஆயுதமல்ல தொழில் நுட்ப கருவி ஒன்றே என்று இந்தியா சமாதானம் சொன்னது இதைவிட விண்கலங்களை அனுப்புவது போன்றவற்றிலும் இந்தியாவின் சாதனைகள் உலகின் கவனத்தை கவர்வதாகவே இருந்துள்ளன.

இந்தியா தற்போது பரீட்சித்துப்பார்த்துள்ள ''அக்னி'' ஏவுகணை 2500 கிலோ மீற்றர் தூரம் செல்லக்கூடியது பதினாறு தொன் எடையுள்ள இது இருபத்தியொரு மீட்டர் உயரமானது.

இந்தியா இவ்வாயுதத்தைப் பரீட்சிப்பதையோ உற்பத்தி செய்வதையோ அனுமதித்தால் எதிர்காலத்தில் அது நீண்ட தூரம் செல்லக் கூடிய ஏவுகணைகளைக் கண்டுபிடிப்பதைத் தடுக்க முடியாமல் போய்விடலாம் எனவும் மேற்கு நாடுகள் அஞ்சுகின்றன.

### வன வளர்ப்பு ஒப்பந்தம்

# அமெரிக்காவின் யோசனை இந்தியாவால் நிராகரிப்பு

(டில்லி)
வன வளர்ப்புப் பற்றி அமெரிக்கா கொண்டு வந்த ஒப்பந்த கோட்பாட்டை தாம் நிராகரித்துள்ளதாக இந்தியா அறிவித்துள்ளது

புவியில் உள்ள அனைத்து வன வளங்களையும் உலக வளமாக கருத வேண்டுமென்று அமெரிக்க ஒப்பந்த கோட்பாட்டில் யோசனை தெரிவிக்கப்பட்டிருந்தது.

# தமிழக ராஜ்யசபா ஆசனம்;

# ராஜஸ்தானில் குழுமோதல்; இராணுவம் அழைப்பு

(ஜெயப்பூர்)
ராஜஸ்தானில் பரத்பூர் மாவட்டத்தின் கும்பேல் நகரில் பெருமளவு குழுமோதல்கள் ஏற்பட்டதைத் தொடர்ந்து அங்கு பதற்ற நிலை நிலவுவதாக ராஜஸ்தான் அரசு தெரிவித்துள்ளது.

பதற்ற நிலை காரணமாக கும்பேல் நகரில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. பதற்றத்தை தணிக்க மாநில அரசின் கோரிக்கையின் பேரில் ராணுவமும் அந்நகருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பொஸ்னியா- கர்சகோவியாவில் போர்நிறுத்தம்

# சரயேயோ விமான நிலையம

மாகத்தில பெருமபகுதி வடக்கு-கிழக்கில் இடமபெறறு வரும் போருக்குச் செலவாகிறது. இதன் காரணமாக பெருமளவில உறபததி வீழ்ச்சியும், வேலையிலலாத் திண்டாட்டமும அதிகரிததுளளது.

அரசாங்கம் கடைப்பிடித்து வரும் தனியார் மயமாக்கல் கொள்கை, வழமையான வேலையிலலாப் படையினருடன மேலும், ஒரு தொகுதி வேலையிலலாப் படையினரைச் சேர்ததுளளது. அதாவது தனியார் மயமாக்கலின் மூலம், மேறகொள்ளபபடும் வேலையாள் குறைபபு நடவடிக்கைகளினால் பெருமளவு எண்ணிக்கையானோர் வேலையிழக்கும் நிலையும உருவாகியுள்ளது. இதனால் நெருககடி தீவிரமாகியுளளது.

போருக்கென பெருமளவு நிதி ஒதுக்கப்படுவதினால் பொருளாதார அபிவிருத்திக்கென ஒதுக்கபபடும தொகை மிகவும் குறைவாக இருபபதினால புதிய வேலைவாய்பபினை உருவாக்கவோ அல்லது உறபததிப பெருக்கத்திறகான வாய்பபோ அறறுப போயுளளது. ஆயுதபபடையினால மட்டுமே வேலைவாய்பபு கிடைப்பதறகான வாய்ப்பு ஓரளவு உண்டு. அது நாட்டின் பொருளாதார அபிவிருததிககு உகந்ததல்ல. பொருளாதாரச் சீர்கேட்டை வழங்கவே மேலும் உதவக் கூடியது.

இதேவேளை, அண்மையில் பாதுகாப்பு செலவு அதிகரிபபை ஈடு செய்யவென, பாதுகாப்பு வரியை ஒரு வீதத்திலிருந்து மூன்று சதவீதமாக சிறிலங்கா அரசாங்கம் உயர்ததியமை அத்தியாவசியப பொருள்களின் விலையை அதிகரிககச் செய்துள்ளது. பால் மாவிலிருந்து மருந்துப் பொருள்கள் வரை இந்தவிலை அதிகர்ப்பு ஏறபட்டுள்ளது. இந்த அதிகரிப்பானது முன்னமேர வேலையில்லாப பிரச்சினை, போதிய வருமானமின்மை போன்றவற்றால மேலும் நெருககடிககு உள்ளாகியுள்ள மக்களுககு அரசின மீது சினத்தை யும் ஆத்திரத்தையும் ஏறபடுததியுளளது.

இந்நிலையில்தான், வடக்கு-கிழக்கில் போரைத் தீவிரமாக்கி சிங்கள மக்களின் கவனத்தை திசை திருப்புவதில் தற்பொழுது அரசாங்கம் ஈடுபட்டுவருது. அதாவது போரினால் ஏறபட்ட பொருளாதாரச் சீர்கேட்டையும, அதனால், ஏறபட்ட அரசியல் கொந்தளிப்பையும் திசை திருப்ப போரையே அரசாங்கம் தெரிவுசெய்ய வேண்டிய அவல நிலையில் உள்ளது அதாவது போர் தொடராவிட்டால் அரசாங்கம் நெருக்கடியில் சிக்கிவிடும் என்ற ஓர் வருந்ததக்க நிலை.

ஆனால் அரசாங்கத்தின் இத் திசைதிருப்பும் போர்' நடவடிக்கையைக் கண்டிக்கும் தென்னிலங்கைப் பத்திரிகையாளர்கள் வடக்கு- கிழக்கில இனபபிரச்சினைக்கு ஓர் அரசியல் ரீதியான சமாதான தீர்வு ஏறபடுவதை விரும்புகின்றார்களா என்றால் அது தான் இல்லை தமிழரின் தேசிய இனப் போராட்டததிற்கு இராணுவ ரீதியான தீர்வே ஒரே வழி என்றே இபபத்திரிகையாளர்கள் வற்புறுத்தி வருகின்றார்கள். அண்மைக் காலத்தில் சிங்கள அரசியற் கட்சிகளுக்கு குறையாமல், ஏன் அரசியல்வாதிகளைவிட இனவாதததை கூடுதலாக இப்பத்திரிகைகளே கக்கின.

தமிழரின் தேசிய இனப்பிரச்சினை தீவிரம்பெற்று பதினைந்து வருடத்திற்கு மேலாகியுள்ள இன்றைய நிலையில் தென்னிலங்கையில் உள்ள எந்த பிரபலமான பத்திரிகை இனபபிரச்சினைதீர்வு குறித்து விவாதித்து தமிழர் ஏறறுக்கொள்ளக்கூடிய ஒரு தீர்வைக் காண வேண்டும என அபிப்பிராயபபட்டன யாவும் இராணுவ தீர்வைப் பற்றியே வற்புறுத்தின. சமாதான தீர்வு. அரசியற்தீர்வென ஒப்புக்குத தெரிவித்தனவே ஒழிய தமிழரைத் திருபதிப்படுததக் கூடிய தீர்வை எபபததிரிகை ஆதரித்தது? எப்பததிரிகை யதார்த்தபூர்வமாக உண்மைத தன்மையைச் சிங்களமக்களுக்குத் தெரிவிததது?

இந்நிலையில், கொந்தளிப்பைத் திசை திருப்ப இராணுவ நடவடிக்கை என்ற குற்றச்சாட்டு அரசாங்கம் சமாதானத தீர்வைப் புறந்தளளிவிட்டது என்பதனால் எழுந்ததல்ல சிங்கள மக்களை ஏமாற்ற முற்படுகின்றது என்பதனால் எழுந்ததே. அதாவது போருக்கெதிரானதல்ல. அரசிற்கு எதிரானது மட்டுமே.

பொறுத்த வரையில் வல்லரசுகளின் வரிசையில் வரக்கூடிய

வும் உத்தியோக பூர்வமாகத் தெரிவித்துள்ளது.

உலகத்திற்கு நிரூபித்துக் காட்டியுள்ளது

கிய காரணங்களில் இதுவும் ஒன்று.

போய்விடலாம் எனவும்மேற்கு நாடுகள் அஞ்சுகின்றன.

### வன வளர்ப்பு ஒப்பந்தம்

# அமெரிக்காவின் யோசனை இந்தியாவால் நிராகரிப்பு

[டில்லி)

வன வளர்ப்புப் பற்றி அமெரிக்கா கொண்டு வந்த ஒப்பந்த கோட்பாட்டை தாம் நிராகரித்துள்ளதாக இந்தியா அறிவித்துள்ளது

புவியில் உள்ள அனைத்து வன வளங்களையும் உலக வளமாக கருத வேண்டுமென்று அமெரிக்க ஒப்பந்த கோட்பாட்டில் யோசனை தெரிவிக்கப்பட்டிருந்தது.

தேசிய வளத்தை உலக ரீதியிலான வளமாக கொண்டு செல்வது நாடுகளின் இறையாண்மை வரம்புகளுக்குள் ஊடுருவுவதாக அமையும்என்பதாலேயே தாம் அதனை நிராகரித்ததாகவும் இந்தியா தெரிவித்தது.

ஆனால் வனவள நெறி முறைகள் பற்றி விவாதிக்க தாம் தயாராகவே இருப்பதாகவும் இந்தியா குறிப்பிட்டது

இதே நேரம் மலேசியாவில் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட மறுத்து விட்டது

## தமிழக ராஜ்யசபா ஆசனம்; பிரதமர் - முதல்வர் பேச்சு

[சென்னை]

தமிழக ராஜ்யசபா இடங்களை இந்திரா காங்கிரஸ் மற்றும் அ.தி.மு.க ஆகிய கட்சிகளு இடையே பகிர்ந்து கொள்வது பற்றி பிரதமர் பி.வி. நரசிம்மராவும் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவும் முடிவு செய்வார்கள் என்று தமிழக இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி என். ராமமூர்த்தி தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

### ஜனாதிபதி பதவிக்கான வேட்பாளர்

## பெயர்களை வெளியிட ஜோதிபாசு கோரிக்கை

[கல்கத்தா]

இந்திய ஜனாதிபதி, உப ஜனாதிபதி பதவிகளுக்கான வேட்பாளர்களின் பெயர்களை இந்திரா காங்கிரஸ் ஒரே சமயத்தில் அறிவிகக வேண்டுமென்று மேற்குவங்க முதலமைச்சர், ஜோதிபாசு இந்தியப் பிரதமர் நரசிம்மராவை கோட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் தொலைபேசியில் இத்தகவலை பிரதமருக்கு தெரிவித்ததாக சி.பி.ஐ. எம். வட்டாரங்கள் தெரிவித்தன.

இடதுசாரி முன்னணிக்கட்சிகள் தமது நிலையை முடிவு செய்வதற்கு உதவியாகவே இவ்வாறு கேட்டுக்கொண்டதாகவும் சி.பி ஐ. எம். தெரிவித்தது.

## மனிதனின் தோற்றம்பற்றி புதிய சித்தாந்தம்

(லண்டன்)

மூன்று இலட்சத்து ஐம்பதின யிரம் வருடம் பழமையான இரு மண்டையோடுகள் சீனாவில் கண்டெடுக்கப்பட்டிருப்பதையடுத்து ஆபிரிக்காவிலேயே இன்றைய மனிதன் தோன்றினான் என்னும் சித்தாந்தம் சந்தேகத்திற்குரியதாகி உள்ளது என்று பிரித்தானிய விஞ்ஞான சஞ்சிகை கருத்துத் தெரிவித்துள்ளது

1989 ஆம் ஆண்டிலும், 1990 ஆம் ஆண்டிலும் மத்திய சீனாவில் கண்டெடுக்கப்பட்ட இந்த மண்டையோடுகள் இன்றைய மனிதனின் தோற்றத்தை நிரூபிப்பதாக உள்ளதெனவும்,

இன்றைய மனிதன் ஆபிரிக்காவில் தோன்றி ஆசியாவிற்கும் ஏனைய கண்டங்களுக்கும் பரவவில்லை என்பதை இந்த மண்டையோடுகள் உணர்த்துவதாகவும் பூகோளத்தின் பல பகுதிகளில் அவன் ஏககாலத்தில் தோன்றியிருக்கலாம் என்பதைக் கூறுவதாகவும் அச் சஞ்சிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 2மாத சண்டையில் 5,700பேர் பலி

(பெல்கிரேட்)

பொஸ்னியா- ஹெர்சகொவினாவில் கடந்த இரண்டு மாதங்களாக நடைபெற்று வரும் சண்டையில் 5700 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் மற்றும் குரோஷிய பாதுகாப்புப் படையினரால் அமைக்கப்பட்ட மருத்துவ கழக பாதுகாப்புக் குழு இத் தகவலை வெளியிட்டது

22 000 பேர் காயமடைந்துள்ளதாகவும் மருத்துவக் கழக பாதுகாப்புக்குழு தெரிவித்தது.

## வறுமையை விரட்டுவதே சூழலை பாதுகாக்க வழி

### இந்திய அமைச்சர்

(றியோடி ஜெனேரோ)

வளரும் நாடுகளின் வறுமைதான் சுற்றுச்சூழல் கேட்டிற்கு முக்கிய காரணம் என்பதால் வறுமையை விரட்டுவதே சரியான உத்தியாகும் என்று இந்திய அமைச்சர் கமல்நாத் பிரேசிலில் நடைபெறும் பூமி பாதுகாப்பு மாநாட்டில் கலந்துகொண்டு பேசுகையில் தெரிவித்தார்

அவர் அங்கு மேலும் பேசுகையில், சுற்றுப்புறச் சூழலைச் சீரழித்த தொழில் நுட்பங்களை கொண்டுவந்து கொட்டுவதற்கு வளரும் நாடுகள் ஒரு தளமாகப் பயன்படுவதாகவும் தெரிவித்தார். அத்துடன் வளர்ச்சியடைந்த நாடுகள் தான் சுற்றுப்புறச் சூழல் சீர்கேட்டிற்கு பிரதான காரணம் என்பதால் அதனைச் சீர்செய்யும் பழுவை வளரும் நாடுகளின் தலையில் சுமத்தக்கூடாது எனவும் கேட்டுக்கொண்டார்.

## ராஜஸ்தானில் குழுமோதல்; இராணுவம் அழைப்பு

(ஜெயப்பூர்)

ராஜஸ்தானில் பரத்பூர் மாவட்டத்தின் கும்பேல் நகரில் பெருமளவு குழுமோதல்கள் ஏற்பட்டதைத் தொடர்ந்து அங்கு பதற்ற நிலை நிலவுவதாக ராஜஸ்தான் அரசு தெரிவித்துள்ளது.

பதற்ற நிலை காரணமாக கும்பேல் நகரில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. பதற்றத்தை தணிக்க மநில அரசின் கோரிக்கையின் பேரில் ராணுவமும் அந்நகருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பொஸ்னியா- கர்சகோவியாவில் போர்நிறுத்தம்

## சரயேயோ விமான நிலையம மீண்டும் மக்கள் பாவனை

பொஸ்னியா- கர்சகோவியாவில் சண்டையிடும் குழுக்களுக்கு இடையே போர் நிறுத்தம் ஒன்று ஏற்பட்டிருப்பதை தொடர்ந்து சரயேயோ விமான நிலையம் போக்குவரத்திற்காக திறந்துவிடப்பட்டுள்ளது.

முன்னதாக சண்டையிடும் குழுக்களுக்கிடையே இணக்கத்தைத் தோற்றுவிக்கும் முயற்சியில் ஐ.நா. பொருளாதார தடைகளை விதித்திருந்தது தெரிந்ததே.

### பாதுகாப்பு ஏற்பாடுகள்

## பொருளாதார சிரமங்களால் பாதிப்படைய போவதில்லை

### - ஏயர் மார்ஷல்

[டில்லி]

பொருளாதார சிரமங்கள் நாட்டின் பாதுகாப்பு ஆயத்த நிலையைப் பாதிக்காது என்று விமானப்படைத் தலைவர் ஏஜர் சீப் மார்ஷல் என். சி. சூரி கூறியுள்ளார். கடப்பாவில் தேசிய பாதுகாப்பு பயிற்சி நிறுவனத்தின் பயிற்சி அணிவகுப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டுவிட்டு புனேயில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் வெகுவேகமாக மாறிவரும் நவீன தொழில் நுட்பத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் உயர் தொழில் நுட்பத்திறனையும், திண்ணிய உறுதியையும் அடையும்படி அவர் கேடேட்டுகளைக் கேட்டுக் கொண்டார்.

## சூழல் பாதுகாப்பு ஒப்பந்தம் இந்தியா கைச்சாத்து

பிரேசிலியா நகரமான றியோ டி ஜெனேரோவில் இந்தியாவும் வேறு சில ஐரோப்பிய நாடுகளும் உயிரினங்கள் பன்முகப்பெருக்கப்பாதுகாப்பு ஒப்பந்தத்தின் கோட்பாட்டு வடிவமைப்பில் கைச்சாத்திட்டன.

நெதர்லந்து ஆஸ்திரேலியா பின்லாந்து உட்பட வேறு சில வளர்முக நாடுகளும் இதில் கையெழுத்திட்டுள்ளன.

பாகிஸ்தான் சீனா, இங்கிலாந்து உட்பட முப்பது நாடுகள் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடவுள்ளதாகவும் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் நாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருவதால் இந்தப்பிரச்சினையில அமெரிக்காதனிமை படுத்தப்பட்டு விட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஈழநாதம்

# பிரச்சினைக்கு தீர்வுகாணாவிட்டால் வன்முறை தலை தூக்கும்

- ரணில்

(கொழும்பு)

சிறிலங்காவின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை எட்ட முடியாது போனால் மீளவும் வன்முறை தலைதூக்கும் என்று அமைச்சர் ரணில் விக்கிரம சிங்கா தெரிவித்தார்.

வியாழனன்று நடந்த செய்தியாளர் கூட்டத்தில் பேசும் போது அவர் இவ்வாறு கூறினார்.

புலிகளிடமிருந்து ஆயுதங்களைக் களைவதால் இனப்பிரச்சினைக்கு சுமுகமான நிரந்தர தீர்வொன்றைக் காண முடியாது என்று அரசு நம்புகிறது. இன்று யுத்தம் ஓய்ந்து சமாதானம் ஏற்பட்டாலும் சந்தோசம் தான் என்றார் அவர்.

பிரதம மந்திரி டி.பி. விஜயதுங்கா இனப்பிரச்சினை இரண்டு மாதத்தில் தீர்க்கப்படும் என்று காலக்கெடு வழங்கியிருப்பது பற்றி இராணுவப் பேச்சாளர் கேணல் சரத் முனசிங்காவிடம் கேட்ட போது, இராணுவம் புலிகள் மீது அழுத்தம் கொடுப்பதன் மூலம் அவர்களை வெற்றி கொள்ளப் பார்க்கிறது. ஆனால் இராணுவத்துக்குக் கால எல்லை என்று ஒன்றும் இல்லை என்று கூறினார்.

# இனப்பிரச்சினையை சுதந்திரக்கட்சி அலட்சியம்

- குமார்பொன்னம்பலம்

(கொழும்பு)

இனப் பிரச்சினையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி அலட்சியம் செய்கிறது என்று அகில இலங்கை காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் குமார் பொன்னம்பலம் கண்டனம் செய்துள்ளார்.

கொழும்பில் அறிக்கையொன்றின் மூலம் இக் கண்டனத்தை குமார் பொன்னம்பலம் விடுத்துள்ளார்.

தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு தமிழ் - முஸ்லிம் கட்சிகளை மீண்டும் அழைத்துப் பேசுவதென சுதந்திரக் கட்சியின் மத்திய சமிட்டி கடந்த 29 ஆம் திகதி முடிவெடுத்துள்ள போதும் இதுவரை தமிழர் - முஸ்லிம் கட்சிகள் பேச்சுவார்த்தைக்கு அழைக்கப்படவில்லை என்றும்,

பேச்சுவார்த்தை தொடர்பாக எந்த அறிவிப்பும் இதுவரை விடுவிக்கப்படவும் இல்லை என்றும்,

இதிலிருந்து தமிழர் பிரச்சினையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அலட்சியம் செய்கிறது என்பதை தெளிவாக புரிந்து கொள்ள முடிகிறது என்றும் குமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

## சுதந்திரக்கட்சி தலைவியின்

# அதிகாரத்தை கட்டுப்படுத்த திட்டமிடப்படுகிறது

சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அதிகாரங்களை கட்டுப்படுத்துவதற்கான யோசனை ஒன்றுக்கு கட்சிக்குள் ஆதரவு பெருகிவருவதாக ''லேக் ஹவுஸ்'' பத்திரிகைகள் தெரிவித்துள்ளது.

கட்சியின் மத்திய கமிட்டியை தேர்ந்தெடுக்கும் அதிகாரத்தை கட்சிப் பாராளுமன்றக் குழுவிற்கு வழங்குவதே இதன் நோக்கமாகும் என்றும் அப்பத்திரிகைகள் குறிப்பிட்டுள்ளன.

உயர்திரு
வேலாயுதபிள்ளை சிவராமலிங்கம்
(ஆயுர்வேத வைத்தியர்)

## போரூட் அதிகாரிகள் கொழும்பு திரும்பினர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வந்திருந்த பேரூட் பொது நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரிகள் நேற்றுக் கொழும்பு பயணமானார்கள்.

இவர்கள் யாழ். நகரில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் தமது அமைப்பின் வேலைத் திட்டங்களைப் பார்வையிட்டனர் என்றும், சகல அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகளைச் சந்தித்தனர் என்றும் தெரியவருகிறது.

(75)

# வெள்ள நிவாரணம் வழங்க அரசிடம் நிதி பற்றாக்குறை

(கொழும்பு)

தென்பகுதியில் கடும் மழை காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்குநிவாரணம் வழங்குவதற்கு அரசு வெளிநாட்டு உதவியை எதிர்பார்க்கிறது.

பாதிக்கப்பட்ட சுமார் இரண்டு லட்சம் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு கணிசமான அளவு நிதி தேவைப்படுகிறது பாரிய நிதி நெருக்கடியை எதிர்நோக்கியிருக்கும் அரசு எதிர்பாராத விதமாக மழைகாரணமாகப் பாதிக்கப்பட்ட மேற்படி மக்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது.

இதனாலேயே அரசு வெளிநாடுகளிடமிருந்து உடனடி உதவியை எதிர்பார்ப்பதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# சபாநாயகர் மீதான நம்பிக்கையில்லாதீர்மானம்

பாராளுமன்ற (அதிகாரங்களும் சிறப்புரிமைகளும்) சட்டத்தின் ஏற்பாடுகளையும் ஜனநாயகத்தின் கோட்பாடுகளையும் வேண்டுமென்றே மீறியதாலும், எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களின் உரிமைகளைப் பறித்தாலும் சபாநாயகர் எம்.எச். முகம்மது மீது பாராளுமன்றத்திற்கு நம்பிக்கை இல்லை. இவ்வாறு குறிப்பிடும் சபாநாயகருக்கெதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் நாளை சிறிலங்கா பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படவுள்ளது.

## பெண்களை

மதிக்க முடியாது. எமது தேசியத் தலைவர் இந்த விடயத்தில் மிகவும்உறுதியாகவும் கண்டிப்பாகவும் உள்ளார். இவ்வாறு தமிழீழ காவற்றுறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவ் அறிக்கையில் அண்மைக் காலங்களில் எமது காவல் பணிமனைகளுக்கு கிடைக்கப் பெற்றபெண்களுக்கெதிரான துன்புறுத்தல்கள் சம்பந்தமானவிசாரணைகளை தொடர்ந்து 55 பேர் வரை தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் இதில் முப்பது பேர் திருமணமானவர்கள். பின் வரும் குற்றங்களுக்காகவே இவர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

1. இளம் பெண்களை காதலித்துவிட்டு திருமணம் செய்யாது ஏமாற்றுவது.
2. திருமணம் செய்வதாக

## சிறிலங்கா

இருப்பதாக கூறப்படுகிறது.

உலகிலேயே ஆட்சியில் உள்ள அரசுக்கெதிராகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்களில் இதுவே மிக அதிகமான தாகக்கருதப்படுகிறது இந்த வகையில் இது ஓர் உலகசாதனையாகவும் கருதப்படுகிறது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அம்பாந்தோட்டை பாராளுமன்ற உறுப்பினர் திரு. மகிந்தராஜபக்ச தலைமையிலான குழுவினர் இக் குற்றப்பத்திரிகையை தயாரித்து வருகின்றனர். ஏற்கனவே 5000 குற்றச்சாட்டுகள் தொகுக்கப்பட்டுக் கோவைப் படுத்தப்பட்டிருக்கின்றது. மிகுதி 15000 குற்றச்சாட்டுக்களும் மிகவிரைவில் தொகு

## வாழைச்சேனையில்

# தமிழர்கள் மீது முஸ்லிம்கள் கொலைப் பயமுறுத்தல்

(மட்டக்களப்பு)

வாழைச்சேனைப் பகுதியில் பலவந்தமாக குடியேற்றப்பட்ட முத்துக்கல பகுதித் தமிழ் மக்கள்மீது முஸ்லிம்கள் வன்முறைகளை மேற்கொள்ளத் தொடங்கி உள்ளனர்.

இப்பகுதிக்கு அடிக்கடிவந்து போகும் முஸ்லிம்கள் தமிழர்களை கொலை செய்யப்போவதாகப் பயமுறுத்தி வருகின்றனர்.

முஸ்லிம்களின் இந்த நடவடிக்கையால் ஆங்குள்ள தமிழ் மக்கள்பெரும்பதற்றம் அடைந்துள்ளனர். முத்துக்கல பகுதி தமிழ் மக்கள் மீது முஸ்லிம்கள் விடுத்துள்ள கொலைப் பயமுறுத்தலை அங்குஇருக்கும் இராணுவத்தினர் சட்டை செய்யாது விட்டுள்ளனர்.

இங்கு தங்கவைக்கப்பட்டிருக்கும் தமிழர்களை அங்கிருந்து வெளியேறவும் விடாது இராணுவம்தடுத்துவருகிறது.

## தற்கொலை

(யாழ்ப்பாணம்)

சிறுப்பிட்டி தெற்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை இராசேந்திரம் (வயது 45) என்பவர் தோட்டக் காணியில் வேப்ப மரம் ஒன்றில் சுருக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார்.

மேற்படி நபர் 5 பிள்ளைகளின் தந்தையாவர். [75]

## திருட்டு

(குருநகர்)

யாழ். பேராலயத்திற்கு அண்மையிலுள்ள குடிநீர் கிணற்றில் பொருத்தப்பட்டிருந்த கிணற்றுவாளி, கப்பி, 25 அடி நீளச்சங்கிலி ஆகியன திருடப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

கிறீன் கிங்ஸ் விளையாட்டுக் கழகப் பராமரிப்பில் உள்ள மேற்படி கிணற்றில் முன்னரும் இத்தகைய திருட்டு நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது

# கப்பற் கூட்டுத்தாபனம் அரசு நிறுவனமாகியது

(கொழும்பு)

சிறிலங்கா கப்பற் கூட்டுத்தாபனம் கடந்த மூன்றாம் திகதி முதல் அரசுடைமை நிறுவனமாக மாற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கூட்டுத்தாபன அலுவலகத்தில் நடைபெற்ற மத வைபவத்தில் 'ஜனாதிபதி பிரேமதாசாவின் ஆலோசனையின் பேரில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் கூடிய விரைவில் நாட்டில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும்' என கப்பற்றுறை திட்ட அமைச்சர் எம். எச் அமீத் தெரிவித்தார்.

ஏனையகூட்டுத்தாபனங்கள் தனியார்மயமாக்க பட்டுவரும் இவ்வேளையில் கப்பற் கூட்டுத்தாபனம் அரசாங்கத்திற்குச் சொந்தமாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ராவின் பேர்த்தியை கடத்தச் சதியாம்

(டில்லி)

இந்தியப் பிரதமர் நரசிம்ம ராவின் பேர்த்தியைக் கடத்திச் செல்லச் சதி செய்ததாக சீக்கியத் தீவிரவாதிகளின் குழுவொன்று பம்பாயில் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

பம்பாயில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட சில சீக்கியர்களை விசாரணை செய்தபோது இந்த விபரம் வெளியாகியதாகக் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் காலிஸ்தான் கொமாண்டோ படையைச் சேர்ந்தவர்கள் என்றும் இந்திய புலனாய்வுத்துறை தெரிவித்துள்ளது.

# வாகன வரிசை இலக்கம் 07-06-1992

சோதனைச் சாவடியில் இறுதியாகப் பதியப்பட்ட வாகனவரிசை இலக்கம்:-4237

சோதனை நிலையத்தைத் தாண்டிச்சென்ற இறுதி வாகன வரிசை இலக்கம்:-3325

இராணுவம் அனுமதித்த இறுதிவாகன வரிசை இலக்கம்:-3300

வடபகுதிக்கு வெளியே சென்றவாகனங்களின் விபரம்-

தனியார் லொறி இலக்கங்கள்.- 42-2364, 27-1494, 41-2509, 26-9992, 26-594, 24-2288, 42-1494, இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் 22 வாகனங்கள்.

வடபகுதிக்குள் வந்த வாகன இலக்கங்கள்:-

41-5947, 24-4292, 21-1939, 24-5029, 41-5359, 26-7612, 24-4726, 26-8878, 28-2385, 41-1227, 28-1857, 27-7993, 27-6692, 24-4361, 27 9626, 27-4162, 24-2394, 21-9661, 27-6259, 36-6925, 36-4269, 25-6314

★ தனியார் வாகன உரிமையாளர்களின் நன்மை கருதி வாகனவரிசை விபரம் எமது பத்திரிகையில் தொடர்ந்தும் வெளிவரும் என்பதை தெரிவித்துக்

## பயிற்சி விமானம்

இந்திய விமானப்படை பயிற்சிக்காக பிரிட்டனின் ஹோக் மற்றும் ராண்ஸ் அலபர விமானங்களை வாங்கவுள்ளது

## வீடுபாக்கச்

தார்.

மேற்குறிப்பிட்ட பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த மக்களிற் சிலர் நேற்றுக்காலை 7 மணியளவில் தங்கள் வீடுகளைப் பார்க்கச் சென்ற போதே இராணுவத்தினர் காவலரண்களில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக தெரியவருகின்றது. இதில் நடுவிலர்மாதர் (வயது 65 தெல்லிப்பழை இழக்கு) என்பவர் காயமடைந்துள்ளார். இவர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கென அனுமதி

## அதிகாரத்தை கட்டுப்படுத்த திட்டமிடப்படுகிறது

சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அதிகாரங்களை கட்டுப்படுத்துவதற்கான யோசனை ஒன்றுக்கு கட்சிக்குள் ஆதரவு பெருகிவருவதாக ''லேக் ஹவுஸ்'' பத்திரிகைகள் தெரிவித்துள்ளது.

கட்சியின் மத்திய கமிட்டியை தேர்ந்தெடுக்கும் அதிகாரத்தை கட்சிப் பாராளுமன்றக் குழுவிற்கு வழங்குவது இதன் நோக்கமாகும் என்றும் அப்பத்திரிகைகள் குறிப்பிட்டுள்ளன.

### தமிழரிடம்

வியாகச் செலற்பட்டதாகத் தெரியவருகிறது.

சந்தேகநபர் ஒப்பந்த அடிப்படையில் அமைச்சு ஒன்றில் கடமைபுரியும் சுருக்கெழுத்தாளரின் மகன்எனப் பொலிஸ் அறிக்கை ஒன்று கூறுகிறது.



உயர்திரு

### வேலாயுதபிள்ளை சிவராமலிங்கம்

(ஆயுர்வேத வைத்தியர்)

அவர்களின்

## 45-ம் நாள் நினைவலைகள்



தோற்றம் 07 - 12 - 1932

மறைவு 23 - 04 - 1992

செல்வத்தின் மடியிலே
சீரோடும் சிறப்போடும் பிறந்த உன்னை
கல்மனம் கொண்டவன் கலக்கியழுத்தானே
நின்மனம் வேகவைத்தானே!

[அவனால்]

வீழ்ந்திருந்த காலத்திலும் வீழாத பண்புகளால்
வாழ்ந்திருந்தாய் சுமை தாங்கியாக:
வள்ளலாக: வையகம் புகழ்
வேந்தனே! விரைந்தோடிய தேனோ!

ஐயா அன்பு சொரிந்தீரே
அணைத்து மகிழ்ந்தீரே பெற்றெடுக்காத
மைந்தர் எம்மைப் பிரிந்து
வேறுலகம் சென்றீரோ!

ஏழைக்கிரங்கி இறுதிவரை வாழ்ந்த
இனியவனே நின் நினைவுகளுடன் வாழ்வோம்.

தங்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

இராமலிங்கம் வீதி,
இல. 153, முடமாவடி,
நல்லூர்.

அன்பு மனைவி
(சி. ஜெகதாம்பிகை),
மைந்தர்கள்.

[சி 4521]



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம் ஆண்டு ஜூன் மாதம் 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது


தில் மிகவும்உறுதியாகவும் கண்டிப்பாகவும் உள்ளார். இவ்வாறு தமிழீழ காவற்றுறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவ் அறிக்கையில் அண்மைக் காலங்களில் எமது காவல் பணி மனைகளுக்கு கிடைக்கப் பெற்றபெண்களுக்கெதிரான துன்புறுத்தல்கள் சம்பந்தமானவிசாரணைகளை தொடர்ந்து 55 பேர் வரை தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் இதில் முப்பது பேர் திருமணமானவர்கள். பின் வரும் குற்றங்களுக்காகவே இவர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

1. இளம் பெண்களை காதலித்துவிட்டு திருமணம் செய்யாது ஏமாற்றுவது.
2. திருமணம் செய்வதாக உறுதி கூறி ஏமாற்றி தாய்மை அடையச்செய்து கைவிடுவது.
3. ஒன்றுக்கு மேற்பட்டபெண்களுடன் ஒரேநேரத்தில் குடும்ப வாழ்க்கையில் ஈடுபடுவது.
4. பெண்களை தாக்குவதும் இம்சைப்படுத்துவதும்.

இவ்வாறான குற்றச் செயல்களினால் பெரும்பாலும் பாதிக்கப்பட்டவர்கள் வறிய குடும்பங்களில் உள்ள திருமணமாகாத பெண்பிள்ளைகளே. இவர்களின் வறுமையையும் அறியாத் தன்மையையும் தமக்கு சாதகமாக பயன்படுத்தும் சமூக விரோதிகள் மீது கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி சகலகாவல்பணிமனைகளுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது இச்சமூகவிரோத சக்திகள் பற்றி சகல பெண்பிள்ளைகளும் விழிப்பாக இருக்கும்படி கேட்டுக் கொள்வதுடன் இவ்வாறான துன்புறுத்தல்கள் ஏற்பட்டால் உடனடியாக அண்மையிலுள்ள காவல் பணிமனைகளுக்குசென்றுஅறிவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 3,000 பாடசாலை

போட்டிப் பரீட்சை மூலம் ஜூன்மாத முடிவுக்குள்தெரிவு செய்யப்படுவார்கள் மீதமுள்ள வெற்றிடங்கள் சேவை மற்றும் மூப்பின் அடிப்படையில் நிரப்பப்படவுள்ளது.

மேலும் பாடசாலைகளில் பதில் கடமை புரியும்2400 ஆசிரியர்கள் நிரந்தரமாக்கப்படவுள்ளார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இத் திட்டம் அமைச்சரவையின் அங்கீகாரத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது இருவாரங்களுக்கிடையில்இதற்கு அமைச்சரவையில் அங்கீகாரம் கிடைத்து விடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### சிறிலங்கா

இருப்பதாக கூறப்படுகிறது.

உலகிலேயே ஆட்சியில் உள்ள அரசுக்கெதிராகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்களில் இதுவே மிக அதிகமான தாகக்கருதப்படுகிறது இந்த வகையில் இது ஓர் உலகசாதனையாகவும் கருதப்படுகிறது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அம்பாந்தோட்டை பாராளுமன்ற உறுப்பினர் திரு. மகிந்தராஜபக்ச தலைமையிலான குழுவினர் இக் குற்றப்பத்திரிகையை தயாரித்து வருகின்றனர். ஏற்கனவே 5000 குற்றச்சாட்டுகள் தொகுக்கப்பட்டுக் கோவைப் படுத்தப்பட்டிருக்கின்றது. மிகுதி 15000 குற்றச்சாட்டுக்களும் மிகவிரைவில் தொகுத்து கோவைப்படுத்தப்பட்டவுடன் மேற்படி குற்றப்பத்திரிகை பகிரங்கப்படுத்தப்பட இருக்கிறது.

### இலங்கை

இதுவரை, தமிழகத்திலிருந்துஇலங்கைக்கு சுமார்25 000 அகதிகள் திருப்பி அனுப்பப் பட்டுள்ளனர். இவர்களில் அநேகர் தாம் வலுக்கட்டாயமாக அனுப்ப பட்டதாக குறிப்பிட்டிருந்தமை தெரிந்ததே.

### முல்லையில்

புலிகளைத்தேடும்நடவடிக்கை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

அலம்பிலுக்குத் தெற்கே இராணுவத்தினர் முன்னேறும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

### மணலாற்றில்

வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதேவேளை கடந்த இரு தாக்குதல்களின் போதும்,மணலாற்றுப் பிரதேசத்தின் தெற்கிலிருந்து தாக்குதலை நடத்திய சிறிலங்கா இராணுவம் தற்பொழுது வடக்கில் இருந்து தாக்குதல்களை ஆரம்பித்தது கடந்த மாதம் 28 ஆம் திகதி முல்லைத்தீவு இராணுவமுகாமிலிருந்து வெளியேறிய இராணுவம் சிலதினங்களுக்கு முன்னர் அலம்பிலைச் சென்றடைந்தன தற்பொழுது அங்கு. மணலாற்றுக் காட்டுப்பகுதி மீது தாக்குதல் நடத்தவென மேலதிக துருப்புக்களும்,கவச வாகனங்களும் அனுப்பப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### அன்னையர்

ததில் ஈகொல்லப்பட்ட இவ் இளைஞர்களை நினைவுகூருவதற்கும், ஜனாதிபதிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவுமே இந்தநிகழ்ச்சி என்று கூறப்படுகிறது.

## வாகன வரிசை இலக்கம்

## 07-06-1992

சோதனைச் சாவடியில் இறுதியாகப் பதியப்பட்ட வாகனவரிசை இலக்கம்:-4237

சோதனை நிலையத்தைத் தாண்டிச்சென்ற இறுதி வாகன வரிசைஇலக்கம்:-3325

இராணுவம் அனுமதித்த இறுதிவாகன வரிசை இலக்கம்:-3300

வடபகுதிக்கு வெளியே சென்றவாகனங்களின் விபரம்-

தனியார் லொறி இலக்கங்கள்.- 42-2364, 27-1494, 41-2509, 26-9992, 26-594, 24-2288, 42-1494, இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் 22 வாகனங்கள்.

வடபகுதிக்குள் வந்த வாகன இலக்கங்கள்:-

41-5947, 24-4292, 21-1939, 24-5029, 41-5359, 26-7612, 24-4726, 26-8878, 28-2385, 41-1227, 28-1857, 27-7993, 27-6692, 24-4361, 27 9626, 27-4162, 24-2394, 21-9661, 27-6259, 36-6925, 36-4269, 25-6314

★ தனியார் வாகன உரிமையாளர்களின் நன்மை கருதி வாகனவரிசை விபரம் எமது பத்திரிகையில் தொடர்ந்தும் வெளிவரும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்திய விமானப்படை பயிற்சிக்காக பிரிட்டனின் ஹோக் மற்றும் ராண்ஸ் அலபா விமானங்களை வாங்கவுள்ளது

### வீடுபாக்கச்

தார்.

மேற்குறிப்பிட்ட பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த மக்களிற் சிலர் நேற்றுக்காலை 7 மணியளவில் தங்கள் வீடுகளைப் பார்க்கச் சென்ற போதே இராணுவத்தினர் காவலரண்களில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக தெரியவருகின்றது. இதில் நடுவிலர்மாதர் (வயது 65 தெல்லிப்பழை இழக்கு) என்பவர் காயமடைந்துள்ளார். இவர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கென அனுமதிக்கப்பட்டுள்ளார். (பா)


## விற்பனைக்கு வந்துவிட்டது




இந்நூலின் பின்னிணைப்பாக

இ. தொ. கா. தலைவர்

திரு. சௌ. தொண்டமானின்

தீர்வுத்திட்டம் முழுமையாக

தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு இணைக்கப்பட்டுள்ளது.